# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2304/81 – 2022 නොවැම්බර් මස 05 වැනි සෙනසුරාදා – 2022.11.05

*2304/81 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு    பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில், இல. J/142, சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில், சண்டிலிப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.07.30 ஆந் திகதிய Ya/SND/ 2021/092 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு "A" எனக் குறிப்பிடப்பட்ட 'கொத்ததனை தெலித்தான் மற்றும் வண்ணான்தறைவளவு' என்றழைக்கப்படும் சுமார் 0.1032 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

காணி எடுப்பதற்கான காரணம் : சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிர்மாணித்தல்.

**1. துண்டு 'A' - கொத்ததனை தெலித்தான் மற்றும் வண்ணான்தறைவளவு - விஸ்தீரணம்: சுமார் 0.1032 ஹெக்டயார்**

வடக்கு: வண்ணான்தறை வளவு, மீசை தோட்டம், கொட்டுக்கிணறு காணிக்கு உரிமை கோரும் பாலசுப்பிரமணியம் குகதாசன் மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: கொத்ததனை தெலித்தான் மற்றும் வண்ணான்தறைவளவு காணிக்கு உரிமை கோரும் சரவணபவன் சித்ரஞ்சன்; தெற்கு: கொத்ததனை தெலித்தான் மற்றும் வண்ணான்தறைவளவு, காணிக்கு உரிமை கோரும் சரவணபவன் சித்ரஞ்சன் மற்றும் வண்ணான்தறை வளவு, மீசை தோட்டம், கொட்டுக்கிணறு காணிக்கு உரிமை கோருபவர் பாலசுப்பிரமணியம் குகதாசன்; மேற்கு: வண்ணான்தறை வளவு, மீசை தோட்டம், கொட்டுக்கிணறு காணிக்கு உரிமை கோரும் பாலசுப்பிரமணியம் குகதாசன் மற்றும் வீதி (பிரதேச சபை).

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/13/2020/PC/294.
பிரதேச செயலாளர் இல.: VSW/DS/LB/ACQ/MOH/SAND.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, ஒற்றோபர் 05.

EOG 11 - 0055